**செய்தி வெளியீடு எண்.99** **நாள்.16.08.2021**

உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை,
சென்னை மாவட்டம்.

RUCO (REPURPOSE USED COOKING OIL)– சமையலுக்கு உபயோகப்படுத்திய எண்ணெயை மீண்டும் மீண்டும் வறுக்கும் போது Total Polar Compunds பயன்படுத்தும் மனித நுகர்வுக்கு 25% மேலாக உள்ள Total Polar Compunds பயன்படுத்தும் போது பாதுகாப்பற்றதாக மாறிவிடுகிறது.

பலமுறை உபயோகப்படுத்திய எண்ணெயினை பயன்படுத்தும்போது எண்ணெயில் உள்ள ஊட்டச்சத்து உள்ளிட்ட பண்புகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் பல்வேறு உடல் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளது. குறிப்பாக புற்றுநோய், இதயப்பாதிப்பு. நெஞ்சுஎரிச்சல், உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன், ஞாபகமறதி, கொழுப்பு மற்றும் கல்லீரல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்பட முக்கிய காரணமாகி விடுகிறது. இதை தவிர்க்கும் பொருட்டு இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் (fssai) மற்றும் பெட்ரோலியம் துறை இணைந்து உபயோகப்பபடுத்திய எண்ணெயை பயோ-டீசல் ஆக மாற்ற திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே நாடு முழுவதும் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் fssai/ல் அங்கீகரிக்கப்பட்ட 33 பயோ-டீசல் தயாரிப்பாளர்கள் மற்றும் 19 அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பயன்படுத்திய எண்ணெய் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தில் பயன்படுத்திய எண்ணெயை வாங்க அங்கிகரிக்கப்பட்ட நிறுவனமான ENVOGREEN ENERGY நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 50 லிட்டர்களுக்கு மேல் பயன்படுத்தப்படும் அனைத்து உணவகங்கள், இனிப்பு மற்றும் கார வகைகள் தயாரிக்கும் கடைகள் மற்றும் துரித உணவகங்கள், ஆகியவைகளில் பயன்படுத்திய சமையல் எண்ணெய்களை மறுமுறை உபயோகப்படுத்தாமல், மறுசுழற்சி முறையில் பயோ டீசலாக தயாரிக்கும் நிகழ்ச்சி சென்னை மாவட்ட ஆட்சியர் முனைவர்.ஜெ.விஜயா ராணி,இ.ஆ.ப., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இது குறித்த விழிப்புணர்வு சென்னையில் நான்கு இடங்களில் 1. சென்னை பாரிமுனை, 2. அண்ணாநகர், புல்லா அவின்யு, 3. நுங்கம்பாக்கம் ஹார்டு உட்டுஸ் சாலை, 4. வேளச்சேரியில் உள்ள ஃபீனிக்ஸ் மஹால் ஆகிய இடங்களில் லயோலோ கல்லுாரி மாணவர்களின் கிராமிய கலை நிகழ்ச்சியுடன் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் இன்று (16.08.2021) EAT RIGHT CHENNAI இயக்கத்தினை பொதுமக்கள் இணையவழி மூலம் கொண்டு செல்வதற்கான புதிய QR CODE-னை அறிமுகம் செய்யப்பட்டு பயன்டுத்துவதற்கு ஏதுவாக இதன் மூலம் சென்னை மக்கள் தங்களது உணவு சம்பந்தமான கருத்துக்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் மற்றும் புகார்களை பதிவேற்றம் செய்து இணையவழி மூலம் பின்தொடரலாம்.

இந்நிகழ்ச்சியில் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையகத்தின் மண்டல இயக்குநர் மருத்துவர். முத்துமாறன், உணவு பாதுகாப்புத் துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர். பெ.சதீஷ்குமார், மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள், என்வோகிரீன் எனர்ஜி நிறுவனர் திரு இரா.செங்கதீர்பாலு, மற்றும் மாவட்ட, நகர ஓட்டல் உரிமையாளர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01